

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம் திருமங்கலத்தில் மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான.இமையநாதன் ஏற்பாட்டில் அ.ம.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஆர்.சரவணன் தலைமையில் அ.ம.மு.க. அ.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகளை சேர்ந்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டச் செயலாளரும், நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தார்கள். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கண்ணகி பன்னீர், எஸ்.செல்வமணி, மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான.இமையநாதன், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், மாவட்ட, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் டி.ராஜ்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கே.ஜி.சீ.பாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்.

## விழுப்புரம், செஞ்சி – ஆலம்பூண்டி கிராமத்தில் காருடன் கிணற்றில் மூழ்கி

# உயிரிழந்த நான்கு பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 6 -

**விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி கிராமத்தில் காருடன் கிணற்றில் மூழ்கி உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு: -

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி கிராமத்தில் 03.03.2026 அன்று காலை சுமார் 08.30 மணியளவில் புதுவை - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் TN10 BE 8935 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்று எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டை இழந்து நெடுஞ்சாலை அருகிலுள்ள தனியாருக்குச் சொந்தமான கிணற்றில் விழுந்து மூழ்கியதில் காரில் பயணம் செய்த சென்னை, கெருகம்பாக்கத்தைச் சேர்ந்த திரு.ராஜா (வயது 44) த/பெ.மணி மற்றும் திரு.வினோத் (வயது 39) த/பெ. சேகர்; கொளப்பாக்கம் காந்தி தெருவைச் சேர்ந்த திரு. ஜெயமுருகன் (வயது 43) த/பெ.ஆதிகேசவன் மற்றும் மௌலிவாக்கம், பொன்னியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த திரு.சேகர் (வயது 27) த/பெ. குமார் ஆகிய நான்கு நபர்கள் கிணற்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## கழகத் தலைவர் - முதல்வர் தலைமையில் ‘திராவிட மாடல்’ 2,0 ஆட்சி அமைந்திட

# களத்திலும் சமூக வலைதளத்திலும் அயராது பணியாற்றுவோம்!

### கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் காணொலிக் கூட்டத்தில் அணிச் செயலாளர் – அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி. ராஜா உரை!

சென்னை, மார்ச் 6-

திராவிட மாடல் 2.0 ஆட்சி நம் கழகத் தலைவர் திராவிட நாயகன் அவர்கள் தலைமையில் அமைவதை உறுதி செய்திட மார்ச் 9ஆம் தேதி, கழக வரலாற்றில் திருப்பு முனை வெற்றிகள் பல தந்த மலைக்கோட்டை மாநகரமாம் திருச்சியில் நடைபெறும் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ தேர்தல் சிறப்பு நிர்வாகிகள் மாநாட்டில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒரு இலட்சம் நிர்வாகிகளும் தவறாமல் பங்கேற்று, களத்திலும் தளத்திலும் நம் பணியை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும் என மார்ச் 3 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை ஏற்ற அணிச் செயலாளர் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆலோசனைகள் வழங்கினார்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரையில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் செயல்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இணைச் செயலாளர் டாக்டர் சி.மகேந்திரன், அணியின் ஆலோசகர்கள், மாநில துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

## கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, நகரம் –

# ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

### செயலாளர் டாக்டர். அ. சுபேர் கான் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச் 6 -

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர் கழகத் தலைவர்; முதல்வர் அவர்களின் நல் வழிகாட்டுதலின் படியும், கழக இளைஞரணிச் செயலாளர்; தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படியும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட, மாநகர,பகுதி, நகரம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் காணொலி காட்சி வாயிலாக மாநிலச் செயலாளர் டாக்டர். அ. சுபேர் கான், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதலாவதாக, மறைந்த சுதந்திரப் போராட்ட தியாகியும், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான நல்லக்கண்ணு அய்யா அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த மாதம் நடைபெற்ற மாநாட்டில் வக்பு வாரியத்தில் பதிவு பெற்ற உலமாக்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் மதிப்பூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியமாக ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு வழங்கப்படும் என அறிவித்த முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன்,

உலமாக்கள் இருசக்கர வாகனம் வாங்க ரூபாய் ஐம்பதாயிரம் தமிழ்நாடு அரசு மானியம், அரசு உருது பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடம் நிரப்பப்படும், கல்லறை மற்றும் கபரஸ்தான் இல்லாத அனைத்து மாவட்டம் மற்றும் மாநகராட்சிகளிலும் அரசு சார்பில் கல்லறை மற்றும் கபரஸ்தான் அமைக்கப்படும்,

சென்னை மற்றும் மதுரையைத் தொடர்ந்து கோவையிலும் வக்ப் தீர்ப்பாயம் அமைக்கப்படும்

என பல்வேறு அறிவிப்புகளை வழங்கிய முதல்வர் அவர்களுக்கு அனைத்து சிறுபான்மையின மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

வருகிற 9 ஆம் தேதியன்று திருச்சியில் நடைபெறவுள்ள கழக நிர்வாகிகள் சந்திப்பில் பெரும் திரளாக கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அணி திரள்வதும், மேலும் நடைபெறவுள்ள தேர்தலில் கழகம் ஏழாவது முறையாக வென்று கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இர ண்டாவது முறையாக மீண்டும் முதல்வர் அரியணை ஏற கழக சிறு பான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அயராது உழைத்திடவும்,

ஒன்று கூடுவோம் வென்று காட்டுவோம்! வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்! உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தாண்டவராயபுரம் ஊராட்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 5 ஏக்கர் நிலப் பரப்பில் ரூபாய். 3 கோடி மதிப்பிட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை காணொளி காட்சி வாயிலாக கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து தே.மலையரசன் எம்.பி., ஒன்றியச் செயலாளர்கள் இரா.வரதராஜன், டாக்டர் வே.செழியன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் சசிகுமார், மனோகர், பைத்தூர் ரவி, பூக்கடை ராஜா, ரஜினி, அன்பழகன், மணிமாறன், பார்த்திபன், இளையராஜா, லியோ மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 01 அன்று புதுக்கோட்டை இராணியார் அரசு மருத்துவமனையில் பிறந்த 10 குழந்தைகளுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தங்க மோதிரம் அணிவித்து, இனிப்புகள் வழங்கினர். நிகழ்வில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், கீரை. தமிழ் ராஜா, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், எம். லியாகத் அலி, வே.ராஜேஸ், தவ.பாஞ்சாலன், தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர்.செல்லத்துரை, எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கழகப் பொறியாளர் அணியின் கோவை ஈரோடு சேலம் மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், கழகப் பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா, கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ சிறப்புரையாற்ற, கரூர் திருமுருகன் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. பொறியாளர் அணி மாநில தலைவர் துரை. கி.சரவணன், துணைச் செயலாளர் கு.சண்முகசுந்தரம் (முன்னாள் எம்.பி), ஈரோடு மண்டல பொறுப்பாளர் அம்பாள். எஸ்.நந்தகுமார், சேலம் மண்டல பொறுப்பாளர் வெற்றி ஞானசேகரன் மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் 150 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகச் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ வழங்கினார். இந்நிகழ்வில் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் கோ.தாமரைச்செல்வன், ஜெ.சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## மார்ச் 9-ல் திருச்சி நடைபெறயிருக்கிற மாநில மாநாட்டில்

# புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் பங்கேற்க முடிவு!

### செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எஸ்.ரகுபதி – கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, மார்ச் 6 –

புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட திமுக சார்பில் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ தி.மு.க நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு திருச்சியில் நடைபெறவிருப்பதையொட்டி, மாவட்டக் கழகக் கூட்டம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்பில், மாவட்ட அவைத் தலைவர்கள் அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.




புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும் தமிழ்நாடு கனிம வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, பிற்படுத்தபட்டோர் நலத் துறை அமைச் சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திருச்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர் பான ஆலோசனைகளை வழங்கினர். நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., மேயர் திலகவதி செந்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக் தொண்டைமான், மாநில, மாவட்ட நிர்வாகிகள் த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், செ.அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், கீரை. தமிழ் ராஜா, எஸ்.ஜெயராமன், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், க.ராஜேந்திரன்,

தொகுதி பொறுப்பாளர்கள் சுப.த.சம்பத், எழில்மாறன் செல்வேந்திரன், செ.குறிஞ்சிவாணன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம். பழனியப்பன், தவ.பாஞ்சாலன், வெ.முத்துக்கிருஷ்ணன், என். சேட்டு, மு.பி.ம.சத்தியசீலன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், ஆர்.ஆர்.சாமிநாதன், கே.பி. அய்யப்பன், பொன்.கணேசன், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், அ.முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், இரா.கணேசன வி.ஆர்.இளையராஜா, கே.எஸ். ரவி, குமார்(ஏ) துரைக்கண்ணு, பேரூர் கழக செயலாளர்கள் பி. அண்ணாத்துரை, உமுருகேசன், வை. விஜயக்குமார், அ.அழகப்பன், கே.சி.சிவக்குமார், ஆபழனிக்குமார், நாசர் (ஏ) செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, த.மணிராஜன், கே.எம்.சுப்பிரமணியன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், செந்தாமரை பாலு, கவிவேந்தன், டி. எம்.ஆர்.ராமமூர்த்தி, சி.அரங்கநாயகம், அ.பிரபா, புத்தாம்பூர் எம்.சுப்பையா, தி.முத்து, இரா.மேகநாதன், வளர்மதி, பாத்திமா பீவி, தேவி, சக்திவேல், சர்வேயர் நடேசன், ஆ. கலைச்செல்வன், வளர்மதி, எம்.ஜி (ஏ) ராமச்சந்திரன், ஹரி விமலாதி, எம்.எம்.பாலு, எஸ்.வி.ஆர்.ஜெய்ஸ்டாலின், கே.ஆர்.ராமசாமி, எஸ். எம்.குமரேசன், ரம்யா பாலு, அப்துல் ஹமீது, டாக்டர் சுதர்சன், சிவக்குமார், அருண் சேகர், இரா.தமிழ்ராசு, ராஜசேகர், மகேஸ்வரி சண்முகநாதன் செந்தில்குமார், செ.ரமேஷ், அற்புத ஹென்றி மற்றும் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மார்ச் 9ல் திருச்சியில் நடைபெறயிருக்கிற திராவிட முன்னேற்ற கழகத்தின் 10 இலட்சம் பேர் திரள்கின்ற மாநில மாநாட்டில் புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்டங்களிலிருந்து 300 பேருந்துகள். 150 ற்கு மேற்பட்ட வாகனங்கள் மற்றும் பிற வாகனங்கள் மூலமாக பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று “வெல்வோம் 200 படைப்போம் வரலாறு” என்கிற தாராக மந்திரத்திற்கு வலுசேர்க்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.

2. தலைவர் தளபதி தலைமையில் அமைந்துள்ள மகா சக்தி மிகுந்த கூட்டணியை 2026ல் வெற்றி பெற செய்து தொடர்ந்து 7வது முறையாக திராவிட முன்னேற்ற கழக ஆட்சியையும், தொடர்ந்து 2வது முறையாக தலைவர் தளபதியின் ஆட்சியையும் கொண்டு வர பாடுபடுவதென தீர்மானிக்கப்படுகிறது.

3. வெல்லும் பெண்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட உதவிய மகளிர் அணி சகோதரிகளுக்கு நன்றியும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளவதோடு, வீடு தோறும் ஸ்டாலின் மகளிர் படை தேர்தல் பரப்புரை செய்வதில் ஈடுபட்டிருக்கும் மகளிர் படையினருக்கு மாவட்ட கழகம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

4. முன்னாள் முதலமைச்சர் O. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் தலைவர் தளபதியின் தலைமையை ஏற்று தன்னையும், தன்னுடைய ஆதரவாளர்களையும் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டதை மாவட்டக் கழகம் வரவேற்கிறது.